ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1656/37 - 2010 ජුනි 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.03
1656/37 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுத்துறைச் சட்டம்

*32 மற்றும் 33ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

*விளையாட்டுத்துறை அமைச்சர் ரத்நாயக முதியான்சேலாகே சந்திரசிறி பண்டார ரத்நாயக்க ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுத்துறைச் சட்டத்தின் 32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கட்டளைகளின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க, கிரிக்கெட் விளையாட்டுக்கான தேசிய சபையான முன்னர் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையென அழைக்கப்பட்ட ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவகத்தின் அலுவல்களை தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்காக, தேர்வொன்றினை நடத்தும் வரை அல்லது மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரை தற்காலிக ஏற்பாடாக, 2009.03.30 ஆந் திகதிய 1595/8 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் மூலம் நியமனம் செய்யப்பட்ட நபர்களின் பெயர்ப்பட்டியலானது 2010.06.01 திகதி முதல் கீழே குறிப்பிடப்படுகின்றவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.*

| | | |
|---|---|---|
| திரு. டி. எஸ். த சில்வா | - | தலைவர் |
| திரு. நிஸாந்த ரணதுங்க | - | செயலாளர் |
| திரு. சுஜீவ ராஜபக்ஷ | - | பொருளாளர் |
| திரு. காலிங்க என். இந்ததிஸ்ஸ | - | அங்கத்தவர் |
| திரு. பிரபாத் பொன்சேக்கா | - | அங்கத்தவர் |
| திரு. அசங்க சந்தன செனவிரத்ன | - | அங்கத்தவர் |

*ரத்நாயக முதியான்சேலாகே சந்திரசிறி பண்டார ரத்நாயக்க,*
*விளையாட்டுத்துறை அமைச்சர்.*

*கொழும்பு,*
*2010, யூன் 1.*

*6 - 377*

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுத்துறைச் சட்டம்**

*32 மற்றும் 33ஆம் பிரிவுகளின் கீழான கட்டளை*

விளையாட்டுத்துறை அமைச்சர் ரத்நாயக முதியான்சேலாகே சந்திரசிறி பண்டார ரத்நாயக்க ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுத்துறைச் சட்டத்தின் 32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கட்டளைகளின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க, றக்பி கால்பந்து விளையாட்டு தொடர்பான தேசிய சங்கமான இலங்கை றக்பி கால்பந்து சங்கத்தின் அலுவல்களை நடத்திச் செல்வதற்காக, 2009.08.21 ஆந் திகதிய 1615/ 35 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் மூலம் நியமனம் செய்யப்பட்ட நபர்களின் நியமனம் 2010.05.21 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் முடிவுறுத்துகின்றேன்.

ரத்நாயக முதியான்சேலாகே சந்திரசிறி பண்டார ரத்நாயக்க,
விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2010, மே 26.

6 - 378

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.